GOVERNMENT OF MADRAS

सत्यमेव जयते

# பல்வேறு பொருள் பற்றி மீன் துறையில் கையாளப்படும் தமிழ் மாதிரிக் குறிப்புகளும் வாக்கிய அமைப்பு முறைகளும்

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

அரசாங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை நெறியாளரால்
பதிப்பிக்கப்பெற்றது.

V211,8(F1)
N66;47
78865

குறிப்புக் கோப்பு எண் 25/63

பொருள்: இந்தி - நார்வே நாட்டுத் திட்டம் – மீன்துறை உதவி நெறியாளர் நியமனமும் மற்றப் பணியாளர்களையும் நியமனமும் – ஒப்பளிக்கப்படுதல் – மேஜை நாற்காலி வகைகளை வாங்குதல் – ஒப்பளிப்பு – சம்பந்தமாக.

பார்வை: 1963–ம் வருடம் ஜூன் மாதம் 22–ம் தேதி 1974 எண்., உணவு விவசாயத் துறை அரசாங்க ஆணை.

அலுவலகங்கள், குடியிருப்பிடங்கள், வகுப்பறைகள், யந்திர அறைகள் ஆகியவற்றிற்கான மேஜை, நாற்காலி வகைகளும், தட்டச்சு யந்திரமும் வாங்குவதற்காக அரசினர் 12,000 ரூபாய் ஒப்பளித்துள்ளனர். இத்திட்ட வேலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை முடித்த பின்னர், இவ்வலுவலகத் தலைமையிடம் மண்டபத்திற்கு மாற்றப்பட வேண்டியிருப்பதால் ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ள தற்பொழுது நியமிக்கப்பட்டவர்களுக்கும், இன்னும் சில நாட்களில் நியமிக்கப்பட வேண்டியவர்களுக்குப் தேவையாக மேஜை, நாற்காலி வகைகள் அளிக்கப்படவேண்டும். ஆகையினால் இருக்கக்கூடிய மேஜை, நாற்காலி வகைகளை வாங்குவதற்காகவும் செலவு செய்ய வேண்டிய தொகை ஒப்பளிப்புப் பெறுவதற்காக மீன்துறை நெறியாளருக்கு கோரிக்கைகளை நாம் இப்போது அனுப்பலாம்.

கூடிய விரைவில் இவ்வலுவலகத்துக்குக் கீழ்க்காணும் மேஜை, நாற்காலி வகைகள் தேவையாகவுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1 | அலுவலர் மேஜைகள் .. .. .. .. | 2 |
| 2 | மேல்நிலை எழுத்தர்கள் மேஜை .. .. .. .. | 4 |
| 3 | பிரம்பு நாற்காலிகள் .. .. .. .. | 10 |
| 4 | தட்டுகள் .. .. .. .. | 11 |
| 5 | பக்க அலமாரி .. .. .. .. | 6 |
| 6 | திரைகள் .. .. .. .. | 2 |
| 7 | ஸ்டூல்கள் .. .. .. .. | 6 |
| 8 | நீண்ட பெஞ்சு .. .. .. .. | 1 |
| 9 | மர அலமாரிகள் .. .. .. .. | 8 |
| 10 | குறுகிய பெஞ்சுகள் .. .. .. .. | 3 |
| 11 | தட்டச்சு மேஜை .. .. .. .. | 1 |
| 12 | தட்டச்சு நாற்காலி .. .. .. .. | 1 |
| 13 | இரும்பு அலமாரிகள் .. .. .. .. | 3 |
| 14 | நிலைப் பேழை .. .. .. .. | 1 |
| 15 | பதிவுகளுக்கான நிலை தாங்கிகள் .. .. .. .. | 4 |
| 16 | மாணவ மேஜை .. .. .. .. | 1 |
| 17 | பத்திரங்களை வைப்பதற்கான பெட்டி .. .. .. | 1 |

இந்த மேஜை, நாற்காலி வகைகளின் தோராய மதிப்பு 7,494 ரூபாயாகும். இதில் விற்பனை வரியும், போக்குவரத்து செலவும் சேரா.

கோரிக்கைகளுக்கான கடிதம் வைக்கப்பட்டுள்ளது.

உ. நெ. (இ.நா.தி)
8·8

மீன்துறை நெறியாளரது ஆணை 1963–ம் வருடம் செப்டம்பர் மாதம் 20–ந் தேதி வரையில் எதிர்பார்க்கப்பட வேண்டும். தயவுசெய்து இது பற்றி சம்பந்தப்பட்ட பிரிவிடமிருந்து கேட்டறிந்து அவசியமாயிருந்தால் ஒரு நினைவூட்டு அனுப்புக.

உ.நெ. (இ.நா.தி)
4·9

நெறியாளரின் 1963–ம் வருடம் செப்டம்பர் மாதம் 21–ம் தேதி 5·46118/63 எண் செயல்முறைகள்: சமர்ப்பிக்கப்படுகிறது.

நெறியாளரின் செயல்முறைகளைப் படித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பளிப்பு கோரப்பட்ட இனங்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மேஜை, நாற்காலி வகைகளில்சில இனங்களை மட்டும் வாங்குவதற்கு நெறியாளர் ஒப்பளித்துள்ளனர். மேஜை, நாற்காலி வகைக்கான ஒப்பளிப்பு கிடைக்கப் பெற்றவுடன் அவற்றை சிறைத் துறையிலிருந்து வாங்க வேண்டும். 1963ம் வருடம் நவம்பர் மாதம் 15-ம் தேதி வரையில் இவ்வலுவலகம் சென்னையில் தொடர்ந்திருக்குமாதலால், 1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் அவற்றை வழங்கவேண்டுமெனச் சிறைத் துறைத் தலைவருக்கு எழுதலாம்.

சிறைத் துறைத் தலைவருக்கு எழுதப்பட்டுள்ள வரைவுக் கடிதம் வைக்கப்பட்டுள்ளது,

உ.நெ. (இ.நா.தி.)
9,9

சிறைத் துறைத் தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது.

சென்னை-7 சிறைத் துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி, 40843/E5/63 ந. மு. எண் கடிதம்-

சென்னை மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு வரைவுக் கடிதம் வைக்கப்பட்டுள்ளது.

உ.நெ. (இ.நா.தி)
19·10

சென்னை 163-47, சிறைத்துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி, 40860, A6/63 எண் கடிதம் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலே கண்ட கடிதத்தைத் தயவு செய்து படித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மீன்துறை நெறியாளர் ஒப்பளிப்பு செய்துள்ள மற்ற மேஜை, நாற்காலி வகைப் பொருள்களை அனுப்புமாறு கடலூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரையும், புதுக்கோட்டை மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரையும் எழுதிக் கேட்கலாம்.

அலுவலகத்தை மண்டபத்திற்கு மாற்றுவது பற்றி சென்னை-3, மத்திய சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்குத் தெரிவித்து, பொருட்களை விரைவில் அனுப்புமாறு அன்னாரைக் கேட்டுக்கொள்ளலாம்.

ஏற்புக்காக இரண்டு வரைவுகள் வைக்கப்பட்டுள்ளன.

உ.நெ. (இ.நா.தி)
11·11

(உண்மையான நகல்)

குறிப்புக் கோப்பு

எண் 36/இ.நா.தி./63

பொருள் : இந்திய-நார்வே நாட்டுத் திட்டம் – இத்திட்டச் செயல்களை இம்மாநிலத்திற்குச் சேர்ந்த மண்டபத்தில் விரிவாக்கம் செய்தல் – திட்டப் பகுதியில் இருப்புப் பாதை நிலையத்தை ஏற்படுத்துதல்—சம்பந்தமாக.

பார்வை : உணவு, விவசாயத் துறை அரசாங்கச் செயலாளருக்கு எழுதப்பட்ட நெறியாளரது 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி, 35587/K3/63 எண் கடிதத்தின் நகல்.

சமர்ப்பிக்கப்படுகிறது :

தென்னிந்திய இருப்புப்பாதை பொது மேலாளரது 1963-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி, 490/C/7 எண் கடிதத்தில் 6-வது பத்தியில் கேட்கப்பட்ட விவரங்களை மண்டபம் (கடற்பணிகள்) உதவிப் பொறியாளரிடமிருந்து பெற்று அவற்றை அனுப்பலாம்.

மண்டபம் (கடற்பணிகள்) உதவிப் பொறியாளருக்கு அனுப்பப்பட வேண்டிய கடிதத்தின் வரைவு வைக்கப்பட்டுள்ளது.

உ.நெ. (இ.நா.தி.)
24·8

மண்டபம் (கடற்பணிகள்) உதவிப் பொறியாளருக்கு நினைவூட்டு வரைவு வைக்கப்படுகிறது.

உ.நெ. (இ.நா.தி.)
10·9

மண்டபம் (கடற்பணிகள்) உதவிப் பொறியாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

மண்டபத்து ஆய்வு–உட்கோட்டத்துச் சேது சமுத்திரம் திட்ட உதவிப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்ற 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதி, 532 M எண் கடிதம்.

மண்டபம் (கடற்பணி) உதவிப் பொறியாளருக்கு வரைவுக் கடிதம் வைக்கப்படுகிறது.

உ.நெ. (இ.நா.தி.)

மண்டபம் (கடற்பணி) உதவிப் பொறியாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

சென்னை மீன்துறை நெறியாளரது 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 5-ம் தேதி, 35587/K3/63 எண் குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது:

நிலத்தைப் பார்வையிடுவதற்காக ஒரு நாளை நிர்ணயம் செய்வதற்காக மதுரை (வாணிப) கோட்டக் கண்காணிப்பாளரை அணுகி அவரிடமிருந்து இதுபற்றி கேட்டறிய வேண்டுமென மீன்துறை நெறியாளர் நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார். கோட்டக் கண்காணிப்பாளருக்குக் கடிதம் எழுதலாம். கோட்டக் கண்காணிப்பாளருக்கு எழுதப்பட வேண்டிய கடிதத்தின் வரைவு ஏற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

உ.நெ. (இ.நா.தி.)
11.11

சமர்ப்பிக்கப்படுகிறது :

அறிவுறுத்தியவாறு மேற்பார்வைப் பொறியாளருக்கு வரைவுக் கடிதம் ஏற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

உ.நெ. ( )
10·11

மதுரை தென்னிந்திய இருப்புப் பாதை (வாணிப) கோட்ட மேலாளரிடமிருந்து வரப் பெற்ற 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 14-ம் தேதி, 490 எண் கடிதம் சமர்ப்பிக்கப்படுகிறது :

இக்கூட்டத்தை 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ம் தேதி 10–30 மணி நேரத்தில் மண்டபம் இருப்புப்பாதை அலுவலர்கள் பயண மாளிகையில் நடத்தத் தீர்மானிக்கப் ட்டுள்ளதாகக் கோட்ட மேலாளருக்குத் தெரிவிக்கவேண்டும்.

மீன்துறை உதவி நெறியாளர் (இ.நா.தி) அன்பு கூர்ந்து கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

மீ.உ.நெ. (இ.நா.தி.)
16·11

சமர்ப்பிக்கப்படுகிறது :

அறிவுறுத்தியவாறு மீன் துறை நெறியாளருக் வரைவுக் கடிதம் எற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

மீ.உ.நெ. (இ.நா.தி)
16·11

சமர்ப்பிக்கப்படுகிறது :

இன்றைக்குக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

சமர்ப்பிக்கப்படுகிறது.

கூட்டம் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ம் தேதி நடைபெற்றது. இருப்புப்பாதைப் பக்கவாட்டிற்கான செலவிற்காக கோட்ட மேற்பார்வையாளருக்கு இப்பொழுது எழுதலாம்.

கோட்ட மேற்பார்வையாளருக்கு வரைவுக் கடிதம், எற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

மீ.உ.நெ. (இ.நா.தி)
29·11

சமர்ப்பிக்கப்படுகிறது :

எற்புக்காக வரைவு நினைவூட்டு வைக்கப்பட்டுள்ளது.

மீ.உ.நெ. (இ.நா.தி.)
26.12

## மீன் துறை

அனுப்புவோர் :

டி. செல்வராஜ், பி.எஸ்ஸி.,
மீன்துறை உதவி நெறியாளர்,
இந்திய-நார்வே நாட்டுத் திட்டம்,
மண்டபம்.

பெறுவோர் :

மீன்துறை நெறியாளர்,
சென்னை-6.

1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 15-ம் தேதி, 328/63 ந. எண்.

ஐயா,

**பொருள் :** பணியாளர் தொகுதி - சில்லறைச் செலவினத்திற்கு ஒதுக்கின தொகையிலிருந்து ஊதியம் பெறும் குற்றேவலர்கள் - மண்டபம், கடற்பணிகள்—" அட்மிரால்டி ஜெட்டி " அருகில் இருப்புப்பாதை நிலையக் கட்டடத்தைக் கட்டுதல்—காவற்காரரை நியமித்தல் – கோரிக்கை.

எனது 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 7-ம் தேதி 265/63 எண் கடிதத்தையும் சென்னை-6. மீன்துறை (திட்) உதவி நெறியாளர் திரு. எஸ். எச். உசேனுக்கு (பி.எஸ்ஸி.) நான் எழுதிய நேர்முகக் கடிதத்தையும் தயவு செய்து படித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நார்வே மீன்துறை உதவித் தலைவர் திரு. ஆண்டர்ஸ்காக் மண்டபத்திற்கு இன்று 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி வந்து சேர்ந்தார்.

விலை உயர்ந்த பண்டங்களும், பல் சக்கர யந்திரம் அடங்கிய இந்திய-நார்வே நாட்டுத் திட்ட M 2 படகு இன்றைக்கு மண்டபத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஓரிரு நாட்களுக்குள் மீன் பிடிப்புத் திட்டம் தொடங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. பண்டங்களையும், பல் சக்கர யந்திரத்தையும் வைப்பதற்காக (இந்திய-நார்வே நாட்டுத் திட்டப் படகுக் கட்டடப் பகுதியை எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ள) மண்டபம் கடற்கரை தொழில் பட்டறையின் அட்மிரால்டி ஜெட்டி அருகிலுள்ள இருப்புப்பாதை நிலையத்தை (1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி) இன்றையிலிருந்து சுவாதீனப் படுத்திக் கொண்டேன். அதற்காக மண்டபம், இருப்புப் பாதை நிலைய கடற்பணி கண்காணிப்பாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

விலை உயர்ந்த இந்திய-நார்வே நாட்டுத் திட்டப் பொருட்களையும், மற்றும் பல்சக்கர யந்திரமும் இன்றைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதால், அவற்றை வைக்க உத்தேசித்துள்ள கட்டடத்திற்கு இரவு காவற்காரர் உடனடியாக நியமித்தல் அவசியமாகிறது. நெருக்கடி காரணமாக, மதுரையிலுள்ள ராமநாதபுர வேலை வாய்ப்பு அமைப்பில் பதிவு செய்துள்ள உள்ளூர்வாசியை இரவு காவற்காரராக (1963ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி இன்று முதற்கொண்டு) நியமித்துள்ளேன். நெறியாளரது ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி முதல் 1964-ம் வருடம் பிப்ரவரி மாதம் 29-ம் தேதி வரையில் இரவு காவற்காரர் நியமனம் செய்யப்படுவதற்காக உடனடியாக ஒப்பளிப்பு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

" 31. விவசாயம்—M. மீன்துறை—XXXIX. இந்திய-நார்வே நாட்டுத் திட்டம்-மண்டபம்—4. மற்றச் செலவுகள்—அலுவலக தற்காலிக சில்லறைச் செலவுகள் " என்பதற்குப் பற்று எழுதபடத் தக்கது.

டி. செல்வராஜ்,
மீன்துறை உதவி நெறியாளர்,
இந்திய-நார்வே நாட்டுத் திட்டம்,
மண்டபம்.

(உண்மையான நகல்)

1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி, 7103-B 63 எண்.

## குறிப்பு

மீன்துறை உதவி நெறியாளர் அலுவலகம்
(முத்தும் சங்கும்),
தூத்துக்குடி.

பொருள்: பணியாளர் தொகுதி – சென்னை கடைநிலைப் பணியாளர் – திரு. எ. அப்துல் சுபான், (கடைநிலைப் பணியாள) – ஈட்டிய விடுப்பு – ஒப்பளிக்கப்படுகிறது.

பார்வை: அவரது 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி விண்ணப்பம்.

சென்னை விடுப்பு விதிகளின் 20 (iii) ஆவது விதியின் கீழ்க் கடைநிலைப் பணியாளர் திரு. எ. அப்துல் சுபானுக்கு முழுச் சம்பளம், படி ஆகியவற்றுடன் 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 18-ம் தேதி முதல் 1963ம் வருடம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி வரையிலும் (அவ்விரண்டு நாட்களும் உட்பட) 10 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு அளிக்கப்படுகிறது.

1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 18-ம் தேதியிலிருந்து 1963-ம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி வரையிலும் அவர் விடுப்பில் செல்லாமல் இருந்தாரெனில், அவர் கடைநிலைப் பணியாளர் பதவியில் தொடர்ந்திருப்பார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

எ. டி. ஐசாக் ராஜேந்திரன்,
மீன்துறை உதவி நெறியாளர்
(முத்தும் சங்கும்), தூத்துக்குடி.

(உண்மையான நகல்)

குறிப்புக் கோப்பு — எண் 7103-B/63

பொருள்: பணியாளர் தொகுதி—சென்னை கடைநிலைப் பணியாளர்—திரு எ. அப்துல் சுபான், கடைநிலைப் பணியாளர்—ஈட்டிய விடுப்பு—கோரிக்கை.

பார்வை: அவரது 1963-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி விண்ணப்பம்.

---

மேலே குறிக்கப்பட்டுள்ள கடிதத்தில் திரு. எ. அப்துல் சுபான், கடைநிலைப் பணியாளருக்கு 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தேதி முதல் 27-ம் தேதி வரையில் (இவ்விரண்டு நாட்களும் உட்பட) 10 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். பணிப் பதிவேட்டிலுள்ளவாறு 22 நாட்கள் ஈட்டிய விடுப்பு பெற அவர் தகுதியுள்ளவர்.

ஆகையினால் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தேதி முதல் 27-ம் தேதி வரையில் உள்ள காலத்திற்கு ஈட்டிய விடுப்பு அளிக்கப்படலாம்.

ஆணைக்காக.

ஏ. டி. ஐசாக் ராஜேந்திரன்,
மீன்துறை உதவி நெறியாளர்
(முத்தும் சங்கும்), தூத்துக்குடி.

(உண்மையான நகல்)

## சென்னை-6 மீன்துறை நெறியாளருக்கு எழுதப்பட்ட இவ்வலுவலக 1963-ம் ஆண்டு டிசம்பர் மீ 18-ம் தேதி, 2383/63 எண் கடிதத்தின் நகல்.

பொருள் : பணியாளர் தொகுதி—சென்னை மீன் துறைச் சார்நிலைப் பணி—தற்காலிக படகுத் தண்டல்கள்—உதவி கண்காணிப்பாளர் மற்றும் பட்டறை யந்திரக் கம்மியர் ஆகிய பதவிகள்—அவற்றிற்கென வகுக்கப்பட்ட விதிகள்—சம்பந்தமாக.

பார்வை : நெறியாளரது 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதி, 1/51067/63 எண் குறிப்பு.

---

இளநிலை யந்திரக் கம்மியர் திட்டமும் அதைச் சார்ந்த உதவிக் கண்காணிப்பாளர், பட்டறை யந்திரக் கம்மியர் ஆகியோரும் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் தேதியிலிருந்து நிறுத்திவிடப்படுமாறு நெறியாளர் முன்னரே ஆணை பிறப்பித்துள்ளார். ஆகையினால், இந்தப் பதவிகளுக்காக வகுக்கப்பட வேண்டிய விதிகளை ஏற்படுத்தப்பட வேண்டியதில்லை.

1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் தேதி 3517 எண் உணவு, விவசாயத் துறை அரசாங்க ஆணையில் (100–5–150 சம்பள விகிதத்தில்) (1-ஆம் தரம்) படகுத் தண்டல் பதவிகள் இரண்டு ஒப்பளிக்கப்பட்டன. 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியில் பதவி உயர்வு மூலம் ஒரு பதவி நிரப்பப்பட்டது. மற்றொன்றில் 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் தேதியில் அவசியமான கல்வித் தகுதிகளுடைய நபர் ஒருவரை நேரிடையாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார்.

அரசினர் தங்கள் குறிப்பாணையில், மேலே சொல்லப்பட்ட பதவிகளையும் படகுத் தண்டல் பதவிக்குத் தற்காலிகமான கூடுதல் பணியாளர் பணித் தொகுதியில் பணியாளர் நடைமுறை நூலில் சேர்க்கலாமென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென கேட்டுள்ளார்கள். கீழே எனது குறிப்புரையைச் சேர்ப்பித்துள்ளேன்.

சென்னை மீன் பிடிப்பு சார்நிலைப் பணியாளர் தொகுதியில் I-ஆம் தரம் III-ஆவது வகுப்பில் அடங்கியுள்ள படகுத் தண்டல் பதவிகளுக்குக் குறிப்பிடப்பட்ட கல்வித் தகுதிகள் :—

"கோஸ்ட் வய்டு மாஸ்டர்ஸ்" சான்றிதழ் இலங்கை அரசாங்கத்தில் அளிக்கப்பட்டவை அல்லது "ஹோம் ட்ரேட் 1,000 டன் மாட்ஸ்" சான்றிதழ் சென்னை அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டவை.

மேலே சொல்லப்பட்ட பதவிக்கு நேர்முக நியமித்தலுக்கான பெரும் வயது 30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிப்பு பயிற்சிக் கழகத்தில் படகுத் தண்டல்களின் கடமைகளின் தன்மை : —

விசைப்படகு ஓட்டுதல்; கடல் டீசல் யந்திரங்களை உபயோகித்தல், தற்கால முறையில் பல்சக்கர இயந்திர மூலம் மீன் பிடித்தல்; கடற் பயணத்தின்போது பயிற்சியாளர்களுக்கு முன் சொன்ன பிரிவுகளில் அனுபவ முறையில் கல்வி புகட்டுதல்.

"மாஸ்டர்ஸ்" அல்லது "மாட்ஸ்" சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் கடலோரத்தில் கப்பலை ஓட்டுவது தவிர்த்து மற்றபடி மேலே சொன்ன பிரிவுகளில் போதுமான அறிவுமிருக்காது. ஆகையால் மீன்பிடிப்புப் பயிற்சிக் கழகங்களின் படகுத் தண்டல் பதவிகளுக்குத் தனிப்பட்ட கல்வித் தகுதிகள் அவசியமாகவுள்ளன. அதே சமயத்தில் இந்தப் பதவிகளுக்கு வேறு எந்த பதவிப் பெயரும் குறிப்பிட இயலாது. ஏனென்றால் கப்பல் அவரது பொறுப்பில் இருப்பதால் அவரே அந்தக் கப்பலின் சிற்றலுவலராவர்.

மேலே சொல்லப்பட்டதை பரிசீலனை செய்யும் பொருட்டு, குறிப்பிடப்பட்ட கல்வித் தகுதிகள், வயதுத் தகுதி ஆகியவற்றைக் கொண்ட தனிப்பட்ட விதிகள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எப்படியிருந்தாலும் அரசினர் அறிவுரையை அனுசரித்து, மீன்துறைப் பயிற்சி நிலையத்தில் படகுத் தண்டலுக்காக, (தனிப்பட்ட I-ஆம் தரம்) உரிமை அளித்து, இதை பணியாளர் நடைமுறை நூல் I-ஆம் தரம் III-ஆவது வகுப்பில் அடங்கிய I-ஆவது தர படகுத் தண்டலுக்குத் தற்காலிக கூடுதலாகக் கருதப்பட வேண்டும்.

எஸ். தியாகராஜன்,
மீன்துறை உதவி நெறியாளர்,
மீன்துறைப் பயிற்சி நிலையம், தூத்துக்குடி.

ஐயா,

பொருள் : கடலோர மீன் பிடிப்பு—பசலி 1373—கொடலிக் கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் குத்தகைக்கு விடுதல்—சம்பந்தமாக.

பார்வை: நெறியாளரது 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி, 44533/5/63 எண் நடப்புக குறிப்பு.

வடக்கு ராஜன் கால்வாயில் முதல் தலைமை யிடத்திலிருந்து 6-ஆவது மைல் வரையில் மீன் பிடிப்பு குத்தகைக்காக 1373-ஆவது பசலியைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு ஆண்டு குத்தகையின் சராசரியை மேற்கொள்ள வேண்டு மென கொடலிக் கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பம் செய்துள்ளது. 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி, 304 எண் உணவு—விவசாயத்துறை அரசாங்க ஆணையின்படி வடக்கு ராஜன் கால்வாயின் 1-ஆவது தலைமை யிடத்திலிருந்து 6-ஆவது மைல் வரையில் மீன் பிடிப்பு உரிமை கொடலிக்கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு

அதிகார வரம்புக்குள் இல்லையென்பதாகக் கருதி 1373-ஆவது பசலிக்குக் குத்தகைக்கு விடப்பட வேண்டுமென 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதியில் தென் ஆர்க்காடு கலெக்டருக்கு முன்னரே பரிந்துரை செய்துள்ளேன். அந்தச் சங்கத்திற்கு சாதகமாகக் கடலூர் உதவி நெறியாளர் தென் ஆர்க்காடு கலெக்டருக்கு பரிந்துரை செய்யவில்லை.

வடக்கு ராஜன் கால்வாயின் 1-ஆவது தலைமையிடம் முதற்கொண்டு 6-ஆவது மைல் வரையில் மீன் பிடிப்பு உரிமை, கொடலிக் கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இரண்டு ஆண்டு சராசரி குத்தகையில் 1948-ம் ஆண்டு முதற் கொண்டு குத்தகைக்கு விடப்பட்டது.

சங்கம் இயங்கும் பரப்பு திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வரையில் விரிவடைந்துள்ளது. வடக்கு ராஜன் கால்வாய், திருச்சி, தஞ்சாவூர், மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டங்களின் எல்லைப் பகுதியின் கீழ் அணைக்கட்டிலிருந்து தொடங்குகிறது. கொடலிக்கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் இயங்கும் பரப்பு திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம் வரையில் விரிவடைந்துள்ளதாலும் வடக்கு ராஜன் கால்வாய் திருச்சி மாவட்ட எல்லைப் பகுதியிலிருந்து ஆரம் பிப்பதாலும் வடக்கு ராஜன் கால்வாய் மீன் பிடிப்பு உரிமை 1948-ஆம் ஆண்டு முதற்கொண்டு முன்சொன்ன சங்கத் திற்குக குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் வடக்கு ராஜன் கால்வாய் தலைமை மதகு அடியில் ஒரு மைல் வரையில் மீன்கள் ஒன்று கூடுவதால் வடக்கு ராஜன் கால்வாயைப் பிரித்து பொது விற்பனை ஏலத்தில் குத்தகைக்கு விடமுடியாது. ஆகையினால், வடக்கு ராஜன் கால்வாயின் 1-வது தலைமையிடத்திலிருந்து 6-ஆவது மைல் வரையில் மீன் பிடிப்பு உரிமை (பசலி 1371, 1372) 1961-62-ம் ஆண்டுகளில் ஏல விற்பனை கேட்கப்பட்ட தொகைகளின் சராசரியை அனுசரித்துக் கொடலிக் கருப்பூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் குத்தகை விடவேண்டுமென்றுத் தென் ஆர்க்காடு மாவட்டக் கலெக்டருக்குத் தயைகூர்ந்து எழுத வேண்டுமென மீன்துறை நெறியாளரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐயா,

பொருள் : மீன் வளம—கட்டடங்கள் மதுரை மீன்துறை நெறியாளரது அலுவலகத்தை மாதம 250 ரூபாய் வாடகையில் ஒரு தனிப்பட்டவரின் கட்டடத்தில் வைத்திருத்தல்.

பார்வை : நெறியாளரது 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 15-ம் தேதி, 15952/2/63 மூ.மு. எண் நடவடிக்கைகள்.

இவ்வலுவலகத்திற்காக 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் தேதி வரையில் மாதம் 250 ரூபாய் வாடகைத் தொகை மேலே குறித்த கேட்புக் கடிதத்தில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. குறைந்த வாடகையில் வேறு எந்தக் கட்டடமும் கிடைக்கப் பெறாத காரணத்தினால், 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரையிலான ஓராண்டு காலத்திற்கு மேலும் 250 ரூபாய் மாத வாடகைப் பணத்திற்கான ஒப்பளிப்பு தயைகூர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

அரசாங்கக் கட்டடங்கள் கிடைக்கப் பெறாததற்கான சான்றிதழின் அசல் நகலும் (1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதி 380/15/64 எண்) வாடகை நியாயமானதென மதுரை கோட்ட நிர்வாகப் பொறியாளர் அளித்த சான்றிதழும் பரிசீலனை செய்யப்பட்டுத் திரும்ப அனுப்பப்படுவதற்காக இணைத்துள்ளேன்.

(உண்மை நகல்)

**பார்வை:** நெறியாளரது 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி, 69444/62 எண் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

கேட்புக் கடிதத்தைப் படித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கீழ்க்காணும் கேள்வியை மீன்துறை நெறி யாளர் எழுப்பியுள்ளார்.

பேரிஜம் திட்டம் நல்ல பலன் அளிக்கும் திட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளபோது மீன் வளர்ப்புக்காக துறையினரிடம் இந்த ஏரியைக் கொடுத்துவிட பி.எச்.டபிள்யு.எல். சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தகைய அரசாங்க நீர்நிலை எவ்வாறு இச்சங்கத்திடம் வந்து சேர்ந்தது ?

1929-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இந்த பேரிஜம் திட்டம் அரசாங்க நீர்நிலையாகும். சங்கம் மூலமாக இந்த வனத் துறைக்கு மீன் பிடித்தல் ஒப்படைக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. மேலும் இப்பொழுது கூட மீன் வளர்ப்பு சம்பந்தமாக வனத்துறை சாதகமாக இல்லையென்பதாகத் தெரிகிறது. அந்தத் துறையினர் அபிப்பிராயத்தில் இந்தத் துறையானது மீன் குஞ்சுகள் மாத்திரம் இருப்பில் வைத்துவர வேண்டுமென்பதும் மீன் பிடிப்புக்கான உரிமங்களை வனத்துறை அளிக்க வேண்டுமென்பதாகும். இதுபற்றி மீன்துறை நெறியாளருக்குத் தெரிவிக்கவேண்டும்.

வரைவுக் கடிதம் வைககப்பட்டுள்ளது.

**பார்வை:** திண்டுக்கல், மீன்துறை உதவி ஆய்வாளரிடமிருந்து வரப்பெற்ற (123/62 எண்) கடிதம்.

மதுரைக் கலெக்டரிடம் கேட்டுக்கொள்வதற்காகக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஏரிகளிலிருந்து மீன் பிடிப்பதற்கான உரிமை வருவாய்த் துறையினால் குத்தகைக்கு விடப்படவில்லை என்பதாக மீன்துறை உதவி ஆய்வாளர் தெரிவித்துள்ளார். ஆனால் தீர்வையுடன் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு 0-3-6 வீதம் கிராமத்தார் களிடமிருந்து மீன் குத்தகைத் தொகை வசூலிக்கப்படுகிறது. மீன் பிடிப்பதற்கான உரிமையை உண்மையில் குத்தகைக்கு விடவில்லை என்றாலும், கிராமத்தார்கள் (விவசாயம் செய்பவர்கள்) மீன் குத்தகைத் தொகை செலுத்தி விட்டு மீன் பிடிப்பு உரிமையை அனுபவித்து வருகிறார்கள். நாம் ஏரிகளை எடுத்துக்கொள்வோமேயானால், கிராமத்தார்கள் மீன் குத்தகைத் தொகை செலுத்தி வருவதால் அவர்கள் ஆட்சேபனை செய்வார்களா என்பது ஆய்ந்து பார்க்கப்படத்தக்கது. இதுபற்றி உத்தரவு கோரப்படுகிறது. மீன்துறை நெறியாளருக்கும் கலெக்டருக்கும் இது பற்றி கடிதம் எழுது முன்னர் இந்த அம்சத்தை விளக்கப்படுத்தவேண்டும்.

**இவ்வலுவலகத்திலிருந்து திருவோணம் பஞ்சாயத்து ஆணையாளருக்கு எழுதப்பட்ட 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் தேதி, 13483/63 எண் கடிதத்தின் நகல்**

பொருள்: மீன்வளம்—திருவோணம் பகுதியில் மீன் வளர்ப்பு நிலையம் கட்டப்படுதல்—ஏற்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பார்வை: உங்களது 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி நடப்பு 9399/63 எண்.

நீங்கள் தெரிந்தெடுத்த இடங்கள் அவையாவன கல்கோட்டை, பிஸ்நத்தூர், புதுநகர், திருவோணம், சில்லாத்தூர், நெமிலி ஆகிய கிராமங்களில் உள்ள இடங்களைத் தாம் பார்வையிட்டதாகவும் நெமிலி, கோல்கோட்டை பிஸ்நத்தூர் ஆகியவற்றில் மீன் வளர்ப்பு நிலையங்கள் கட்டுவதற்கு அவை தகுதியாக இல்லை என்பதாக அதிராமபட்டினம் மீன்துறை ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

ஆகையினால், மாதிரி வரைபடத்தை அனுசரித்து புதுநகர், திருவோணம், சில்லாத்தூர், நெமிலி ஆகிய கிராமங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் மீன் வளர்ப்பு நிலையங்களை அமைக்குமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன்

(உண்மையான நகல்)

## குறிப்புக் கோப்பு 13992-E/62.

பொருள்: பணியாளர் தொகுதி—இளநிலை கோட்டத்தில் கரையோர மீன் பிடிப்பு பணிக்காக அமர்த்தப் பட்டுள்ள பணியாளர்களை 28–2–1963-ம் தேதிக்குப் பின்னர் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொள்ளுதல்.

சமர்ப்பிக்கப்படுகிறது:

கோரிக்கைகள் மீன்துறை ஆய்வாளரிடமிருந்தும் நாகப்பட்டினம் மீன்துறை ஆய்வாளர் அதிராமபட்டினம் மீன்துறை ஆய்வாளர், கும்பகோணம் மீனதுறை உதவி ஆய்வாளர் ஆகியோர்களிடமிருந்தும் யோசனைகள் பெறப்பட வேண்டும். குறிப்பாணை வைக்கப்பட்டுள்ளது.

மீன்துறை உதவி ஆய்வாளர் (அதிராமபட்டினம்) 1463/62 தேதி, 1-12-1962.

கோப்பில் வைக்கலாம். நாகப்பட்டினம் மீன்துறை ஆய்வாளருக்கு நேர்முகக் கடிதம் வைக்கப்பட்டுள்ளது.

மீன்துறை ஆய்வாளர் (நாகப்பட்டினம்) 10–12–62 தேதி, 321/62 எண்.

கோப்பில் வைக்கலாம். கும்பகோணம் உதவி ஆய்வாளரிடமிருந்து இன்னமும் யோசனைகள் எதிர்பார்க்கப்படு பன்றன. கும்பகோணம் உதவி ஆய்வாளருக்கு அனுப்புவதற்கான குறிப்பாணை கையொப்பத்திற்காக வைக்கப் பட்டுள்ளது.

யோசனைகள் வரப்பெற்றுக்கொள்ளப்பட்டன. யோசனைகள் வைக்கப்பட்டுள்ளன.

மீன்துறை நெறியாளருக்கு நினைவூட்டு.

மீன்துறை நெறியாளர், சென்னை 6–1–63 தேதி 71840 C-1/62 எண். பதிவு செய்யப்பட்டு மேற்கொண்டு வேலை செய்வதற்காக 1963–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் தேதி வரையில் நிறுத்தி வைக்கவேண்டும்.

மீன்துறை நெறியாளர், சென்னை 6–2–63 தேதி, 71840 C–1/62 எண்.

பரிசீலனை செய்ய வேண்டும். மீன் துறை நெறியாளருக்கு அனுப்பப்பட வேண்டிய பதில் வைக்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்படுகிறது:

மீன்துறை நெறியாளர், சென்னை 28–2–63 தேதி 71840 C–1/62 எண்.

1962-ம் வருடம் பிப்ரவரி மாதம் 2-ம் தேதி 442-ம் எண் உணவு விவசாயத் துறை அரசாங்க ஆணையில் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களுக்குச் சம்பந்தப்பட்ட நிதி விவரப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மீன்துறை நெறியாளருக்கு எழுதப்பட வேண்டிய கடிதத்தின் வரைவு வைக்கப்பட்டுள்ளது:

மீன்துறை நெறியாளர், சென்னை, 28-2-63. எண் 71840. 62 எண்.

கோப்பில் வைக்கலாம்.

மேலொப்பம் செய்த கடிதம் வைக்கப்படுகிறது. வெளியிட்ட பின்னர் மறு கவனிப்புப் பதிவேட்டுடன் இதை வைக்கலாம்.

சமர்ப்பிக்கப்படுகிறது:

இதற்கு மேல் நடவடிக்கை தேவையில்லை. மூன்றாண்டு முடிவாகச் செய்துவிடலாம்.

(ஒப்பம்) எஸ். ஜி.

அனுப்புபவர் :

திரு எ. டி. வெங்கடசாமி, பி. எஸ்ஸி.,
மீன்துறை உதவி நெறியாளா,
மேட்டூர் அணை.

பெறுபவர் :

மீன்துறை நெறியாளர்,
சென்னை-2.

22—6—63 தேதி, 9070/ /62 எண்

ஐயா,

பொருள் : மீன்வளம்—நீர்த்தேக்கப் பெரிய மீன் வளங்கள்—கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம்—உரிமம் மூலம் மீன் பிடிப்புத் திட்டம்—யோசனைகள்—சமர்ப்பிக்கப்படுகின்றன.

பார்வை : 1. நெறியாளரது 7-6-63 தேதி, 59106/2/62 எண்.

2. பவானிசாகர் மீன்துறை (F W B) உதவி நெறியாளரது 20—6—63 தேதி 6076/ /62 எண் கடிதம். நெறியாளருக்கும் எழுதப்பட்ட கடிதத்தின் நகல் மேட்டூர் உதவி நெறியாளருக்கு அனுப்பப்பட்டது.

முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள கடிதத்தில் பவானிசாகர் (F W B) மீன்துறை உதவி நெறியாளர் செய்துள்ள பரிந்துரையின் அடிப்படையில், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பகுதியில் மீன் பிடிப்பு முன்னோடித் திட்டமாக ஒன்று ஆரம்பித்து அதில் உரிமம் மூலம் மீன் பிடிப்புத் திட்டத்தைத் தொடங்குவதற்கான யோசனைகளை இதனுடன் சமர்ப்பித்துள்ளேன்.

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்தில் மீன் வளம் அபிவிருத்தி செய்வதற்கும், அதில் முழுப் பயன் காண்பதற்குமான திட்டம் 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் தேதி 1623-ம் எண் உணவு விவசாயத் துறை அரசாங்க ஆணையில் ஒப்பளிக்கப்பட்டது. 1957–58 ம் ஆண்டு முதல் 1962–63ம் ஆண்டு வரையில் இந்த நீர்த் தேக்கத்தில் வாணிக முறையில் ஆதாயமாகவுள்ள "கேட்லா", "ரோகு", "மிரிகல்", "சேல் கெண்டை", "வெண்கொண்டை", "பௌரி", "கோழி மீன்", "கரம்பை", "அரிஞ்சான்" ஆகிய இனங்களைச் சேர்ந்த மீன் குஞ்சுகள் கீழ்க்காணும் எண்ணிக்கையில் விட்டு வைக்கப்பட்டன.

| ஆண்டு. (1) | இருப்பில் வைக்கப்பட்ட எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1957–58 | 54,652 |
| 1958–59 | 1,59,204 |
| 1959–60 | 1,46,990 |
| 1960–61 | 4,01,365 |
| 1961–62 | 1,77,505 |
| 1962–63 | 9,91,091 |

மேலும், கூடிய விரைவில் வளர்ந்து வரும் மீன் குஞ்சு வகைகளைத் தொடர்ந்து விட்டு வைக்கப்படுதலில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்த முறை, புதிதாக விட்டு வைக்கப்பட்ட வகைகள் நீர்த்தேக்கத்தில் நிலைபெறும் வரையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இருப்பினும், இங்கே இயற்கையாகவே அடைபட்டுள்ள சேல் கெண்டை வகை மீன்கள் உள்ளன. நீர்த்தேக்கத்தில் 2 அங்குலம் ரங்கூன் வலைகள், 2 அங்குலம் வலைகள், 6 அங்குலம் கேட்லா வலைகள் ஆகியவற்றின்மூலம் சோதனை மீன் பிடிப்பு இயக்கத்தால், 20 செண்டி மீட்டர் முதல் 82·50 செண்டி மீட்டர் வரை நீளம் உடையவையும் 0.25 கிலோ கிராம் முதல் 12 கிலோ கிராம் எடையுள்ளவையுமான நன்கு வளர்ச்சியடைந்து நாட்டு கெண்டை மீன்களாகிய "கேட்லா", "பட்டு குஞ்சு", "ரோண்டியஸ்", "கெண்டை", "திலாப்பியா" ஆகியவகைகள் கிடைக்கின்றன. சோதனை மீன் பிடிப்பு நடத்தப்பட்டதில் இரண்டு மீனவர்களைக் கொண்ட ஒரு பிரிவு மூலம் 15 நாட்கள் 727.50 கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப்பட்டன. அதன் விற்பனை மூலம் 485·90 ரூபாய் கிடைக்கப்பெற்றது. சோதனை மீன் பிடிப்பு இயக்கத்தைப்பற்றி நன்கு அறிந்துகொண்ட பின்னர், நன்கு அமைந்த 2 அங்குலம் கன்னி, 100 துண்டின் ஊடுவலை, ரங்கூன் வலைகள் பயன்படுத்தி உரிமம் மூலம் மீன் பிடிப்பதற்கான திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பவானிசாகர் (F W B) உதவி நெறியாளர் பரிந்துரை செய்துள்ளார். ஒவ்வொரு உரிமத்திற்கும் மொத்தம் அனுமதிக்கப்பட வேண்டிய நீளம் ஊடுவலை 500 மீட்டர்கள், ரங்கூன் வலைகள் 250 மீட்டர்கள், 100 துண்டில்கள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், அவர் யோசனை கூறினார். உரிமத்திற்குக் கட்டணத் தொகை மாதத்திற்கு ஐந்து ரூபாயாகவோ அல்லது ஆண்டொன்றுக்கு 50 ரூபாயாகவோ நிர்ணயிக்கப்படலாம். 500 மீட்டர் ஊடுவலை 250 மீட்டர் ரங்கூன் வலைகள் ஆகியவற்றுடன் இரண்டு மீனவர்கள் அடங்கிய முன்னோடித் துறைத் திட்டப் பிரிவை ஏற்படுத்தவும் யோசித்துள்ளேன்.

இந்த யோசனைகளினால் ஏற்படும் முதல் ஆண்டுச் செலவுக்கான நிதி மதிப்பீடு கீழே கொடுத்துள்ளேன்.

மீளாச் செலவு—

| | ரூபாய். |
|---|---|
| (1) கோாகல் என்று சொல்லபடும் அயல் நாட்டுப் படகும், அதற்கு வேண்டிய துணைப் பொருட்கள் ஆகியவற்றின் விலை. | 100·00 |

| | | ரூபாய். |
|---|---|---|
| (2) 500 மீட்டர் ஊடுவலை, 250 மீட்டர் ரங்கூன் வலை, வலை பின்னுவதற்காகும் செலவு உட்பட. | .. | 800·00 |
| (3) எடை கணக்கிடும் கருவியின் விலை | .. | 100·00 |
| மொத்தம் | .. | 1,000·00 |

மீளும் செலவு—

| | | ரூபாய. |
|---|---|---|
| 15 ரூபாய் வீதம் இரண்டு மீனவர்கள் கூலி—($2 \times 15 \times 12$) | .. | 360.00 |
| 40 ரூபாய் வீதம் இரண்டு மீனவர்களுக்கு பஞ்சப்படி, தனி ஈட்டுப்படி—($2 \times 4 \times 12$) | .. | 960.00 |
| கூடைகள் வாங்குதல், வலைகள் பின்னுதல், மற்றும் இடைநிகழ் செலவுகள், ஆகியவற்றிற்கான சில்லரைச் செலவினங்கள். | .. | 100.00 |
| மொத்தம் | .. | 1,420.00 |

எதிர்பார்க்கப்படும் வரவுகள்.

| | | ரூபாய். |
|---|---|---|
| மாதத்தில் 25 அலுவல் நாட்களில் நாள் ஒன்றுக்கு சராசரி 25 பவுண்டு வீதம் 7,500 பவுண்டு மீன்களை, பவுண்டு 0.25 வீதம் விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கக்கூடிய $25 \times 25 \times 12$. | .. | 1,875·00 |
| (எறக்குறைய) 50 உரிமங்களுக்கு ஆண்டொன்றுக்கு 50 ரூபாய் வீதம் உரிமக் கட்டணத் தொகை $50 \times 50$. | .. | 2,500.00 |
| மொத்தம் | .. | 4,375.00 |

உத்தேசிக்கப்பட்டுள்ள பிரிவு தன்னிறைவு பெறக்கூடியதாகவும், சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி மக்களுக்குத் தேவையான புத்தம்புதிய மீன்களை ஒழுங்காக வழங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். துறை மூலம் பிடிக்கப்படும் மீன்களை தினந்தோறும் கிருஷ்ணகிரியிலிருந்து எடுத்துச் சென்று ஒப்ப அறிவிப்பு மூலம் விற்பனைக்குக் கொண்டுவர வேண்டும். மேட்டூர் அணையில் கோரகல் என்று சொல்லப்படும் அயல்நாட்டுப் படகு வாங்கலாம். இரண்டு மீனவர்களும் மேட்டூர் அணையில் நியமிக்கப்படலாம்.

தற்காலப் போர் அவசர காரணமாக, கண்காணிப்புப் பணியாளர் எவரும் அவசியமில்லையென்பதாகக் கருதப்பட்டது. தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டே, (K.R.P.) மீன்துறை உதவி ஆய்வாளர் இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்க இயலும். மேலே குறிப்பிட்ட இந்த சந்தர்ப்பத்தில், இத்திட்டத்திற்கான ஒப்பளிப்பை விரைவில் அளிக்குமாறு அரசினரை வேண்டுகிறேன்.

மீன் துறை உதவி நெறியாளர்,
மேட்டூர் அணை.

## குறிப்பு கோப்பு எண் 9607/62

பொருள் : மேட்டூர் அணையில் மீன் பண்ணை—பூக்கும் மரங்களைப் புதியதாகப் பயிராக்கும்—சம்பந்தமாக.

சேலம் மாவட்ட வன அலுவலருக்கு எழுதுவதற்கான கடிதத்தின் வரைவு ஏற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

மீன் துறை நெறியாளருக்கு எழுதுவதற்கான கடிதத்தின் வரைவு ஏற்புக்காக துவக்கப்பட்டுள்ளது.

1. தென் சேலம், மாவட்ட வன அலுவலரிடமிருந்து வரப்பெற்ற 7—11—62-ம் தேதி, 14816/62—ஓ. மூ. கடிதம் உதவி நெறியாளர் படித்துப் பார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட வன அலுவலருக்கு எழுதப்பட்ட பதில் ஏற்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

2. மீன் பண்ணை நிலத்தை மாற்றுவது பற்றி நெறியாளர் பிறப்பித்த அறிவுரை சம்பந்தமாக, கீழ்க் காணும் முறையில் புதிய குட்டை அமைப்பதற்காக இரண்டு விலை குறிப்புகள், தங்கள் ஏற்புக்காக வைக்கப் பட்டுள்ளன.

### மாதிரியும் புதிய பலகையும்

### சென்னை அரசாங்கம்

### மீன் வளர்ப்பு நிலையம், மேட்டூர் அணை

முன்சொன்ன பலகை 5 அங். நீளம் $2\frac{1}{4}$ அங். அகலம் உடையது. மாதிரியை ஏற்கலாம். இரண்டு விலைக் குறிப்புகள் கீழ்க் காணுமாறு உள.

38·75

50·62

1-வது இனம் குறைந்த விலையுள்ளதால் அதையே ஒத்துக்கொள்ள வேண்டும்.

ஆணைக்காக

ரூ. 38·75 விலை ஏற்கப்பட்டது.

(ஒப்பம்.) மீன்துறை உ. நெ, (க)

ஏற்புக்காக இரண்டு வரைவுகள் வைக்கப்பட்டுள்ளன.

நெறியாளர், மாவட்ட வனத் துறை அலுவலர் ஆகியோருக்கு எழுதப்படும் வரைவுக் கடிதங்கள் ஏற்புக்காக வைக்கப்பட்டுள்ளன. உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்காக சேலம் மாவட்ட வன அலுவலரது 14—12—1962 தேதி 16608/62-எம். எண் கடிதம் வைக்கப்பட்டுள்ளது. நெறியாளர் அனுப்பியுள்ள நினைவூட்டை அதற்கான பதிலுடன் வைக்கப்பட்டுள்ளது, 11—3—63 தேதி 2/379/63 எண் கடிதம் வைக்கப்பட்டுள்ளது. இதைக் கோப்பில் வைக்கலாம். கரையோர) மீன் துறைத் துணை நெறியாளருக்கு நேர்முகக் கடிதம் வைக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி தொழில் நுட்ப மீன்துறை உதவி நெறியாளரது 27—2—62-ம் தேதி, 4905/A/61 எண் கடிதத்தின் நகல்

பொருள் : மீன்களை டப்பியில் அடைத்தல்—தூத்துக்குடியில் மீன் டப்பி அடைத்தல்-தொழிற்சாலை நிறுவுதல் சம்பந்தமாக.

பார்வை : 3—1—62 தேதி, 35 எண் உணவு-விவசாயத் துறை அரசாங்க ஆணை (நெறியாளரது 6—1—62 தேதி 44816/K1/61 எண் மேலொப்பம்).

முன் சொன்ன அரசாங்க ஆணைக்கிணங்க 111-வது திட்ட காலத்தில் தூத்துக்குடியில் மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலை நிறுவப்பட ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுமாறு நான் கேட்கப்பட்டுள்ளேன், இது சம்பந்தமாக சில முன் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுள்ளேன். அடுத்த நிதியாண்டு முடிவிற்குள் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும்.

மேலும் முன் ஏற்பாடுகள் செய்வதற்கு முன், நமது தொழிற்சாலைக்குத் தேவையான யந்திரங்கள், தளவாடங்களைப் பற்றி முதல் தரமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதன் மூலம், நமது பிரிவில் மிகவும் நவீன யந்திரங்களைப் பொருத்திக் கொள்வதோடன்றி, ஆதாயமற்ற யாதொரு யந்திரப் பகுதியையும் நீக்கிவிட முடியும்,

மீன்களை டப்பியில் அடைக்கும் தொழில் மிகுந்த வளர்ச்சி அடைந்துள்ள கொச்சி (கள்ளிக்கோட்டை அருகிலுள்ள) பேபோர் ஆகிய இடங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் சென்று பார்த்ததில் நன்மை பயக்கும், அதிலிருந்து, இந்த மாதிரி மீன் அடைப்பு செய்யும் வெளிநாடுகளுக்கு ஓரளவில் இங்கிருந்து மீன் ஏற்றுமதியாகி வருகின்றது, இவ்வகையில் கட்டடங்கள் அமைப்பது பற்றிய விவரங்களை நாம் தெரிந்துகொள்ள முடியும், மேலும் வெளிநாட்டு விற்பனையில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க பதப்படுத்தும் தொழில் முறைகளைப் பற்றியும் நான் அறியமுடியும், ஆகையினால் இந்த இரண்டு இடங்களையும் ஒரு வாரத்தில் மேலே குறிக்கப்பட்டுள்ளவாறு ஆராய்ந்தறிவதற்காக அனுமதி அளிக்குமாறு வேண்டுகிறேன், இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், இதனுடன் ஏற்புக்காக எனது பயண நிகழ்ச்சி முறையை அனுப்பியுள்ளேன்.

கூடிய விரைவில் ஆணை வேண்டப்படுகிறது.

(ஒப்பம்) எஸ். டி. சாரி,

(உண்மை நகல்)

**சென்னை-2, கடல் உயிரியல் மீன்துறை உதவி நெறியாளர் திருமதி ஜே. ஜி. ஆப்ரஹாமுக்கு தூத்துக்குடி தொழில் நுட்ப மீன்துறை உதவி நெறியாளர் திரு. ஆர். சீனுவாசன் எழுதிய 30—3—1963-ம் தேதி, 1622-A/61 எண் நேர்முகக் கடிதத்தின் நகல்.**

பொருள் : சட்டத் தொகுப்புகள் சென்னை நிதித் தொகுப்பு—தொகுதி I மீன் வளம்—ஷார்க்லிவர் எண்ணெய் நிலையங்களுக்குத் தற்காலிக முன் பணம்—திருத்தங்கள்—கடிதத்தின் நகலும் பதிலும் அனுப்பப்படுதல்.

பார்வை : 1. எனது 22—12—62-ம் தேதி, 1622-A/62 எண் கடிதம்.

2. உங்கள் 22—3—63-ம் தேதி, 19219 D 4/61 எண் நேர்முகக் கடிதம்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட தங்களது நேர்முகக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். ஒவ்வொரு ஆண்டும் வாங்கப்படுவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தற்காலிக முன் பணமாகிய 1,000 ரூபாய் ஷார்க்லிவர் எண்ணெய் திட்டம் சம்பந்தமாகச் சில்லறைச் செலவுகளைச் சரி செய்வதற்காக எற்பட்ட தொகையாகும், இதில் 4—11—59 தேதி 3651 எண் உணவு—விவசாயத்துறை அரசாங்க ஆணையில் ஒப்பளிக்கப்பட்ட பருவகால முன் பணமும் சேர்ந்துள்ளது, இந்தத் தொகை தூத்துக்குடி (தொழில் நுட்ப) மீன்துறை உதவி நெறியாளரால் மாத்திரமே வாங்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக, இவ்வலுவலக 22—12—62 தேதி, 1622/A/62 எண் கடிதத்தில் 5-ஆவது பத்தியைக் கவனித்துப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், பல்வேறு அரசாங்க ஆணைகள், இரண்டு வெவ்வேறு கணக்கு தலைப்புகள் ஆகியவற்றில் ஒப்படைக்கப்பட்ட (675 425 ரூபாய்) 1,100 ரூபாய்க்குப் பதிலாக இதன் முன்னமே விவரிக்கப்பட்டுள்ளவாறு தற்பொழுது 1,000 ரூபாய் மட்டுமே தற்காலிக முன் பணமாக இருக்கும்.

தங்கள் உண்மையுள்ள
(ஒப்பம்) ஆர். சீனுவாசன்.

(உண்மையான நகல்)

சமர்ப்பிக்கப்பட்டது:

தூத்துக்குடி வடக்கு பீச் ரோடு 89 எண்ணில் உள்ள தற்போதைய கட்டடம் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது, 1—4—62-ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு இக் கட்டடத்தை எடுத்துக்கொள்ளச் சென்னை மீன்துறை நெறியாளர் அனுமதித்துள்ளார். அந்த கால அளவு 31—3—63 தேதியோடு முடிவடைகிறது. (நெறியாளரது 22—7—61 தேதி, 26017/CS2/61 எண் குறிப்பு.)

2. உதவி நெறியாளரது கட்டடத்திலுள்ள பண்டகக் கிடங்கிற்கு F.T.B.S. மாற்றுவதற்கான யோசனை இதுவாகும். தூத்துக்குடி அலுவலகத்திற்கான ஒப்பளிப்பு இதுவரை வரப்பெறவில்லை. 1963-64-ம் ஆண்டுக்கு 11-ஆம் பாகத் திட்டமாக இவ்வேலையை எடுத்துக்கொள்ளுமாறு அரசினர் அறிவுரை பிறப்பித்துள்ளார் என்பதாக நெறியாளர் தெரிவித்துள்ளார். ஆகையால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த நிலையத்தை பயன்படுத்திக்கொள்வதற்காக இதை மறுமுறை மாற்றி அமைத்து தகுதியுடையதாக இதைச் செய்துகொள்ள இயலும்.

3. தற்பொழுதுள்ள கட்டடத்தைப் போன்று நன்கமைந்த தகுதியான வேறு எந்தக் கட்டடமும் இல்லை எனத் தெரிகிறது. தற்பொழுதுள்ள கட்டடத்திலே தொடர்ந்து இருந்து வருவதே அவசியமாகும். ஆனால், மதுரை மில்கள் லிமிடெட் கம்பெனி கொடுத்துள்ள சம்மதத்தின் காலம் 31—3—63-ஆம் தேதியில் முடிவடைகிறது. ஆதலால் இதற்கான சம்மதத்தை முதலில் பெறவேண்டும். இதற்குள் வாடகை நியாயமானதென்பதற்கான சான்றிதழும் இவ்வகையில் பயன்படக்கூடிய அரசாங்கக் கட்டடம் எதுவும் 1963-64-ம் ஆண்டிற்கு கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழும் அனுப்புமாறு நிர்வாகப் பொறியாளருக்கு எழுதவேண்டும்.

ஆணைக்காக

(உண்மையான நகல்)